மதிய உணவாக
கோழி பிரியாணி
ருசியிக்க நூடில்ஸ் வகைகள்
றிக்கோ
கோப்பியை அரைத்துப்
பெற்றுக்கொள்ள
செந்தாமரை
(றிக்கோ)
370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

★ ஐஸ்கிறீம் வகைகள்
★ பாலூத்தா சர்பத்
★ [illegible]
செந்தாமரை
(றிக்கோ)
குளிர் தடாகம்
370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 புரட்டாதி 29 சனிக்கிழமை (15 — 10 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 325



## பிரதமர் சந்திரிகாவுக்கு பிரபா வாழ்த்து

கொழும்பு, ஒக். 15
பிரதமர் சந்திரிகா அரசுக்குழுவின் மூலம் அனுப்பிய வாழ்த்துக்குப் பதிலாக — விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் தமது வாழ்த்தை அரசுக்குழுவின் ஊடாக பிரதமருக்கு அனுப்பி வைத்திருக்கிறார்.
இப்படி பி.பி.ஸி. தெரிவித்தது. (இ-஧)

"பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட அரச குழுவின் தலைவர் பாலபட்டபெண்டி பேச்சுவார்த்தையின் பின் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில், கூட்டறிக்கை வாசிக்கிறார். (இ-3-9)



பேச்சுவார்த்தைகளை முடித்துக் கொண்டு அரச தூதுக்குழு பிரதிநிதிகளில் ஒருவரான லயனல் பெர்ணாண்டோ ஹெலியில் ஏறுகிறார்.

## ★ இன்னும் பத்து நாட்களில் இரண்டாம் கட்டப் பேச்சு

# போர் நிறுத்தம் நோக்கி படிப்படியாக நகர்ந்து செல்லவே அரசு விருப்பம்

## வெற்றிஅளிக்கும் என்கிறார்லயனல்

இரு தரப்பினரும் நேர்மையாக நடந்து கொண்டால் சமாதானப் பேச்சுக்கள் வெற்றியளிக்கும்.
லயனல் பெர்னாண்டோ முன்கண்டவாறு தெரிவித்தார்.
காதல் போன்றதே சமாதானப் பேச்சுமாகும் இரு தரப்பினரும் நேர்மையாக நடக்கத் தவறும்போது பிரிவு ஏற்படுகிறது'' என்றும் அவர் கூறினார். (இ-3-9)

## 'பக்ஸ்' செய்தி கிடைத்ததும் கோயில் சென்ற சந்திரிகா

தாம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததும் யாழ். மக்கள் தமக்கு அளித்த கோலாகல வரவேற்பு பற்றி நேற்று முன்தினம் மாலை திரு. லயனல் பெர்னாண்டோ அனுப்பிய ''பக்ஸ்'' (Fax) செய்தி செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலமாக பிரதமர் சந்திரிகாவுக்குக் கிடைத்ததும் உடனடியாக அவர் கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் கோவிலுக்குச் சென்று வழிபாடு செய்தார்.
விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக அமைய வேண்டும் என வேண்டி கையில் மலர்த் தட்டு ஏந்தியவாறு பிரதமர் சந்திரிகா அங்கு நடந்த விசேட பூசை வழிபாட்டில் கலந்து கொண்டார் என இலங்கை வானொலி தெரிவித்தது.
சமூக, அரசியல், கலாசார நிறுவனங்களால் பொன்னம்பலவாணேஸ்வரர் கோவிலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அந்த விசேட பூசையில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

## புதியவர்களும் பேச்சில் கலந்து கொள்ளலாம்

''விடுதலைப் புலிகளுடன் நடக்கவிருக்கும் அடுத்த கட்டப் பேச்சுக்களில் பங்குபற்ற அரச பிரதிநிதிகளாக நாங்கள் மீண்டும் வரலாம், புதியவர்களும் வரக்கூடும்'' அரச குழுவில் அங்கம் வகித்து வந்த தகவல்துறை அமைச்சுச் செயலாளர் லயனல் பெர்னாண்டோ தெரிவித்தார்.
யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இப்படிக் கூறினார். [இ-3-9]

## 18 மீனவர்கள் இன்று விடுவிக்கப்படுவர்

பலாலியில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 18 மீனவர்கள் இன்று விடுதலை செய்யப்பட உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
பலாலியில் இருந்து இவர்களை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வருவதற்காக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் இரு அதிகாரிகள் நேற்று யாழ்ப்பாணத்தில் இருந்து ஹெலி மூலம் பலாலி சென்றனர்.
பலாலியில் விடுதலை செய்யப்பட்ட இவர்கள் காங்கேசன்துறையில் இருந்து 'கோமாரி' கப்பல் மூலம் இன்று காலை பருத்தித்துறைக்கு அழைத்து வரப்படுவர் என தெரிவிக்கப்பட்டது. (இ-[illegible]-9)

## ஜனாதிபதி இராணுவத்துடன் கலந்து ஆலோசிக்க வாக்குறுதி

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 15

★ பகைமையை படிப்படியாக நீக்கி, போர் நிறுத்தத்தை நோக்கி நகர்ந்து செல்ல அரசாங்கம் விரும்புகின்றது.

★ போர் நிறுத்தத்தை கொண்டு வருவது குறித்து ஜனாதிபதியுடனும், பாதுகாப்பு அமைச்சுடனும் கலந்தாலோசிப்பதாக அரச தரப்பினர் கூறினர்.

★ பூநகரிப் பாதையை திறப்பது சம்பந்தமாக இராணுவ உயர் பீடத்துடன் பேச்சுக்களை நடத்தப் போவதாகவும் அரச தரப்பு பிரதிநிதிகள் தெரிவித்தனர்,

★ பேச்சுவார்த்தைகள் பரஸ்பர நல்லெண்ணத்தின் அடிப்படையில் ஆக்கபூர்வமாக நடைபெற்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும், அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்ற பேச்சுவார்த்தையின் முடிவில் —
நேற்றுப் பிற்பகல் விடுக்கப்பட்ட கூட்டறிக்கையில் மேற்கண்ட தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.
உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் குறைந்த விலையில் கிடைக்க வகை செய்வதாகவும் —
அத்தியாவசிய சேவைகளை சீரமைப்பது, புனரமைப்பது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதாகவும் — அரச தரப்புப் பிரதிநிதிகள் வாக்குறுதி அளித்ததாகவும் கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.
கூட்டறிக்கையின் முழு விவரம் வருமாறு:-
தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரச தரப்பினருக்கும் மத்தியில் கடந்த இரண்டு நாட்கள் நடந்த பேச்சுவார்த்தைகள் பரஸ்பர நல்லெண்ண அடிப்படையில் ஆக்கபூர்வமான முறையில் நடைபெற்றன.

(4ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டாம் கட்டப் பேச்சுக்கு முன்னர் யுத்த நிறுத்தத்துக்கு முயற்சிப்போம்

### ராஜன் ஆசீர்வாதம் உதயனுக்குத் தகவல்

யாழ்ப்பாணம், ஒக். 15
இரண்டாம் கட்டப்பேச்சுக்களுக்காக மீண்டும் யாழ்ப்பாணம் வருவதற்கு முன்பு யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு நாம் முயற்சிப்போம்.
அரசுக்குழுவின் உறுப்பினரான இலங்கை வங்கித் தலைவர் திரு. ராஜன் ஆசீர்வாதம் உதயனுக்கு அளித்த பேட்டி

([illegible] பக்கம் பார்க்க)

## அரச குழுப்பிரதிநிதிகள் கொழும்பு புறப்பட்டனர்

விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடன் கடந்த இரண்டு நாட்களாக நடத்திய பேச்சுக்களை முடித்துக் கொண்டு ஸ்ரீலங்கா அரச குழுப் பிரதிநிதிகள் நால்வரும் நேற்று மாலை 3.00 மணிக்கு விமானப்படையின் ஹெலியில் பயணமானார்கள்.
நேற்றுக் காலை 8.30 மணிக்கு ஆரம்பமான பேச்சுக்கள் நண்பகல் 1.45 மணி வரை நடைபெற்றன.
அதைத்தொடர்ந்து 2.15 மணி முதல் 2.55 மணிவரை வெளிநாட்டு, உள்நாட்டு, உள்ளூர் செய்தியாளர்களுக்கு இரு தரப்பு பிரதிநிதிகளும் பேட்டியளித்தனர்.
விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளான திருவாளர்கள் கே. கரிகாலன், கே. ரவி, சி. இளம்பரிதி, இ. டொமினிக் ஆகியோரும் —
அரச பிரதிநிதிகளான கே. பாலபட்டபெண்டி, லயனல் பெர்னாண்டோ, ராஜன் ஆசீர்வாதம், நவீன் குணரத்தின ஆகியோரும் கலந்து கொண்டனர். (இ-3)

## முதலாவது கட்டபேச்சு பெரும் வெற்றி!

### ரத்மலானையில் பாலபட்டபெண்டி

கொழும்பு, ஒக். 15
அரசுக்குழு நேற்று மாலை 5.05 மணியளவில் ரத்மலான விமான நிலையத்தை வந்தடைந்தது.
குழுவின் தலைவர் பாலபட்டபெண்டி பி.பி.ஸி சிங்களச் செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோவுக்கு பேட்டியளித்தார்.
அதில் அவர் சொன்னதாவது;
முதற்கட்டப் பேச்சு பெரு வெற்றியளித்துள்ளது. எனினும், போர் நிறுத்தம் பற்றி முடிவெடுக்கப்படவில்லை
எமது எதிர்பார்ப்புகளில் பெரும்பாலானவை நிறைவேறின.
போர்க் கைதிகள் விடுதலை பற்றி எதிர்காலத்தில் முடிவு செய்யப்படும்.
பொருளாதாரப் பிரச்சினை, அபிவிருத்தி மற்றும் போர் நிறுத்தம் பற்றி விரிவாகப் பேசினோம்.
அது குறித்த ஏற்பாடுகள் பற்றி அரசுடன் கலந்தாலோசித்த பின்னரே மேலும் பேச்சுவார்த்தை நடத்தப்படும்.
முதற்கட்டம் வெற்றியாக முடிந்துவிட்டது இரண்டாம் கட்டப் பேச்சுக்கு ஆயத்தம் செய்துவிட்டு திரும்பியுள்ளோம். திகதி நிர்ணயிக்கப்படவில்லை.
இரண்டாம் கட்டப் பேச்சுக்கு விடுதலைப் புலிகள் கொழும்பு வரமாட்டார்கள்.

(4ஆம் பக்கம் பார்க்க)





விடுதலைப் புலிகளும் அரச பிரதிநிதிகளும் நடத்திய பேச்சுவார்த்தைகள் முடிவடைந்த பின்னர் நேற்று இரு தரப்பினரும் நடத்திய செய்தியாளர் மாநாட்டின்போது எடுக்கப்பட்டபடம். இடமிருந்து வலமாக புலிகள் தரப்பில் திருவாளர்கள் சி. இளம்பரிதி, ஆ. ரவி, சு. டொமினிக், கே. கரிகாலன் ஆகியோரும் அரச தரப்பில் திருவாளர்கள் பாலபட்டபெண்டி, லயனல் பெர்னாண்டோ, நவீன் குணரத்தின, ராஜன் ஆசீர்வாதம் ஆகியோரும் காணப்படுகின்றனர். (இ-3-9)
படங்கள்: ராஜ்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அடைவைக்கக் கூடிய நல்ல இன கோழி முட்டைகள், பன்டம், வான்கோழி முட்டைவுள் குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (33320)

### ஆட்டுக்கடா விற்பனைக்கு

11 மாத வயதுடைய துப்பரவான் சானன் இன கடா நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. பட்டி தேவைக்கு பாவிக்க உகந்தது. க. சிவபாதசுந்தரமூர்த்தி அச்சுவேலி வீதி, நவக்கிரி, புத்தூர். (7958)

### புறொயிலர் மலிவு

புறொயிலர் கோழிகள் விற்பனைக்குண்டு. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அண்ணா பாம், இணுவில். (சி-9506)

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. இல. 7, நிக்கலஸ் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, கண்டிக்குளி. (33348)

### கோழிக்குஞ்சு விற்பனை

Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள். பதிவு செய்து 19-10-94 புதன் கிழமை பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (33295)

3 கிழமை நிரம்பிய Prima Hyline Brown சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி நல்லூர். (33321)

### எரு விற்பனைக்கு

கீழ்க்காண் விலாசத்தில் எரு விற்பனைக்கு உண்டு. வாங்குபவர்கள் அலுவலக நேரத்தில் எருவை பார்வையிட்டு கூறுவிலையை சமர்ப்பிக்கவும். தபால் உறையில் இடதுபக்க மேல் மூலையில் எருவிற்கான கூறுவிலை என எழுதி பொதுமுகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். (சி-9332)

### வீடு தேவை

ஆனைப்பந்திக்கும் நீர்வேலிக்கும் இடையில் பருத்தித்துறை றோட்டிற்கு அண்மையில் சிறிய வீடு அல்லது அனெக்ஸ் தேவை. நேரிலோ அல்லது கடிதம் மூலமோ தொடர்பு கொள்ளவும். ஸ்கைலைன்ஸ், 281 B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (7961)

### மணப்பெண் தேவை

வயது 43, Technical Graduate உள்ளூர் உத்தியோகத்தருக்கு 30-10-94க்கு முன்னர் முடிவெடுத்து வெளிநாடு வரவிரும்பும் கல்வி அறிவுள்ள மணமகள் மறுமணத்துக்கு தேவை. சீதனம், நிறம் தடையல்ல ஜாதகத்துடனும் முழுவிபரங்களுடனும் விண்ணப்பிக்கவும். இல. 707, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (33312)

### கலைஞர்கள் தேவை

பிரபல இசைக்குழுவுக்கு அனுபவம் பெற்ற பாடகர், தபேலா, லீட் - கிற்றார், பேஸ் - கிற்றார் இசைக்கலைஞர்களும் உதவியாளர்களும் தேவை. விபரங்களுக்கு 20 - 10 - 94ற்கு முன்னர் மாலை4-30—6-30க்கு இடையில் தொடர்பு கொள்ளவும்: இல. 61/1, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (33118)

### ஆண்டு - 4 5

ஆண்டு 5 மாணவர்களுக்கு பிரபல பாடசாலை மாதிரி வினாத்தாள்கள் 15-10-94 சனிக்கிழமையும், ஆண்டு 4 மாணவர்களுக்கு புலமைப் பரிசில் (1995) மாதிரி வினாத்தாள்கள் 16-10-94 ஞாயிற்றுக்கிழமையும் வெளியிடப்படும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (33330)

### 'சக்தி இயற்கைப் பசளை'

வதிவிட வேளாண்மைக்கு ஒரு வரப்பிரசாதம் சக்தி இயற்கைப் பசளை. விதிமுறைப்படி தயாரான கூட்டெரு சக்தி இயற்கைப் பசளை விளைச்சலைப் பெருக்க சக்தி இயற்கைப் பசளை பரீட்சார்த்த பக்கற் விலை ரூபா 6/-. 5 கிலோ பக்கற் விலை ரூபா 50-, மொத்த கொள்வனவிற்கு விசேடகழிவு. ''மில்க்வைற்''. (சி-9327)

### தேவை

வயோதிபத் தம்பதிகளுக்கு சமைக்கவும், வீட்டைப் பராமரிக்கவும், வீட்டோடு இருக்கத் தகுந்த பெண் உதவியாள் உடன் வரவும். சம்பளம் பேசிக் கொள்ளலாம். இல. 25, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்.. (33316)

### விற்பனைக்கு

2 பொமனேரியன் பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. ''கோமதி'' பிள்ளையார் கோயிலடி, சித்தன் கேணி. (7663)

### றோணியோ பிரதி செய்தல்

மலிவு விலையில் செய்து கொடுக்கப்படுகிறது. 100 இரண்டு பக்கப் பிரதிகளுக்கும் 30/- மட்டுமே அறவிடப்படுகிறது. 374, மணிக்கூட்டு வீதி, அறிவகம், யாழ்ப்பாணம். (சி-9512)

## C. C. A.

வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.

மீண்டும்
ஒரு புதிய பிரிவு
பொருளியல்

A/L 94 பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான வினா விடை வகுப்பு

சனி, ஞாயிறு
மாலை 5 மணி

ஆசிரியர்:
K. உதயன்
B. B. A. (Spl)

ஆரம்பம்:
16 — 10 — 1994

குறிப்பு:
1980ஆம் ஆண்டு முதல் அலகு ரீதியான வினாக்கள் மீட்கப்படும்.
(சி 9510)

## சமூக சேவை நிதிக்காக

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி
திருக்குடும்ப கன்னியர் மட
இன்டரக்ட் கழகங்கள்
இணைந்து வழங்கும்

### இசை, நடன, நாடக விருந்து

காலம்: **15-10-1994** பி.ப. **4** மணி
இடம்: புனித பத்திரிசியார் கல்லூரி மண்டபம்

★ நீங்கள் ஆவலோடு எதிர்பார்த்திருக்கும்
திருமறைக் கலாமன்றத்தின்
★ ஒரு தேடல் ★
நாடகம் மேடையேறுகின்றது.

காணத் தவறாதீர்கள்

✶ ரிக்கட்டுகளை ✶
மண்டபவாசிலில் பெற்றுக் கொள்ளலாம்.

- மேற்படி இன்டரக்ட் கழகங்கள்.

[33328]

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 27 — 04 — 1962
உதிர்வு: 15 — 10 — 1991

தவப்புதல்வி
### சிவகௌரி அம்மன்

ஆண்டு மூன்று ஆனதம்மா
ஆயினும் உம்மை மறக்கவில்லை
முள்ளில் மலர்ந்த ரோஜாவே
எம் மனதில் மலர்ந்த பண்பு ரோஜா
என்று உம்மை நினைத்து வாழுகின்ற;

— பாசமலர்கள்.

றியோ கிறீம் ஹவுஸ்,
75, பாங்சல் வீதி,
யாழ்ப்பாணம்.
(33347)

## 7-ம் ஆண்டுநினைவலைகள்



அன்னை மடியில்: 23 — 06 — 1959
அன்னியன் அடியில்: 15 — 10 — 1987

### அமரர் சதாசிவம் சிவகுமார் (சடா)

ஏழாண்டு கடந்தென்ன எம் இனிய செல்வமே
உந்தன் சிரித்த முகமும் அன்பும் பண்பும்
என்றும் எமக்குள்ளேயே வாழ்கின்றது.
உம் ஆத்ம சாந்திக்காய் ஆண்டவனை
பிரார்த்திக்கின்றோம்.

உந்தன் நினைவில் வாழும்;
அம்மா, ஐயா,
குடும்பத்தினர்.

கொய்யாத்தோட்டம்,
இருபாலை,
கோப்பாய்.

## விற்பனைக்கு

★ கேர் (F)போம் பிறசியர்ஸ்
★ சில்வர் சில்ட் சொக்ஸ்வகைகள்,
★ பெனியன்கள்
★ நூல்,
★ எலாஸ்டிக் வகைகள்
★ பட்டிகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

### சிறிமுருகன்

303, காங்கேசன்துறை சாலை,
யாழ்ப்பாணம். (33333)

## வட இலங்கை நுண்கலை மன்றம்

★ ஓவிய - சிற்பக் காட்சி - 94
**1994 - 10 - 16** ஞாயிறு பிற்பகல் 2மணி முதல்
★ ஆசிரியர் தர **4. 3**ஆம் தரச்சான்றிதழ் வழங்கலும், கலை நிகழ்வுகளும்
**1994 - 10 - 17** திங்கள் பிற்பகல் 2-30மணி முதல்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில்

★ 94 தேர்வு விண்ணப்பக் காலம் நவம்பர் 1 முதல் 30 வரை
★ படிவங்கள், பாடத்திட்டங்களுக்குத் தொடர்பு கொள்க.

வட-இலங்கை நுண்கலை மன்றம்,
கல்வித்திணைக்களம்.
நல்லூர். யாழ்ப்பாணம்.
[சி-9331]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆண்டுத் திதியும்



### அமரர் தம்பிமுத்து கணேசன்

(தொழில் நுட்ப உத்தியோகத்தர், கட்டடத் திணைக்களம்)

தோற்றம்: 25 — 05 — 1942
மறைவு: 11 — 10 — 1993

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும், ஆண்டுத் திதியும் இன்று (15-10-94) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பங்கு கொண்டு மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

மனைவி, மக்கள்,
பெற்றோர், சகோதரர்கள்,

கண்டிவீதி,
கொடிகாமம்.
(33336)

## ஓராண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 08 — 02 — 1943
அமலன் அடியில்: 25 — 09 — 1993

திருவாட்டி
### சந்திரேஸ்வரி நவரத்தினம்

எமை நீத்த தெய்வம்

பெண்ணெனப் பிறந்த தெய்வம் எம்மைப்
பேணியே மதித்த தெய்வம் என்றும்
கண்ணெனக் கண்ட தெய்வம் காணும்
கமலமாம் முகமாந் தெய்வம்
தண்ணெனப் பேசுந் தெய்வம் சாற்று
சந்திரேஸ்வரியாம் நாமத் தெய்வம்
எண்ணி யின்றஞ்சலி செய்யு மாறு
எம்மை நீத்தே சிவம்சேர் தெய்வம்.

கணவன், பிள்ளைகள்.

யாழ். ஆனைக்கோட்டை,
(33313)

## சாவகச்சேரி லயன்ஸ் கழகம்

நடத்தும்

### ஆங்கில வகுப்பு

இடம்: சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி
காலம்: 16 - 10 - 1994 ஞாயிறு
காலை 8-30 மணி

பதிவு செய்த மாணவர்கள் தவறாது சமூகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

லயன்ஸ் கழகம்,
சாவகச்சேரி.

தலைவர்,
கல்விக் குழு.
[சி-9333]

## இணுவில் திருவருள்மிகு சிவகாமி அம்மன் கோயில்

17ஆவது வருட நவகலச அபிஷேகம்,
நவசக்தி பூஜை, நவசக்தி அர்ச்சனை,
நவசக்தி ஹோமம்,
நவந்துவார தங்க ரத உத்ஸவ

### விஞ்ஞாபனம்

காலம்: **16-10-1994** ஞாயிறு

காலை 8மணி ஏழாலை வசந்தபுரம்
வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான
பஜனை குழுவினரின் பஜனையோடு
நவகலச அபிஷேகம்

பிற்பகல் 3-30 மணி நவசக்தி அர்ச்சனை
மாலை 6-00 மணி தங்கரத பவனி

தமிழீழத்தில் கிரியானுபவத்தில் முதிர்ச்சிபெற்று
சிறந்து விளங்குகின்ற பின்வரும்
சிவாச்சாரியர்கள் அர்ச்சனையை
நடத்தி வைப்பார்கள்.

சிவஸ்ரீ வை. சபாரத்தினக்குருக்கள் - உரும்பிராய்
சிவஸ்ரீ மு. பரமசாமிக்குருக்கள் - கோப்பாய்
சிவஸ்ரீ சோ. சுப்பிரமணியக்குருக்கள் - கோப்பாய்
சிவஸ்ரீ சிவ. சர்வேஸ்வரக்குருக்கள் - மயிலணி
சிவஸ்ரீ ஐ. வைத்தியநாதக்குருக்கள் - மாவிட்டபுரம்
சிவஸ்ரீ பா. வைத்தியநாதக்குருக்கள் - ஊரெழு
சிவஸ்ரீ இ. சுப்பிரமணியக்குருக்கள் - அரியாலை
சிவஸ்ரீ சி. சோமாஸ்கந்தக்குருக்கள் - மயிலணி
சிவஸ்ரீ ஆ. சந்திரசேகரக்குருக்கள் - நீர்வேலி
சிவஸ்ரீ கா. சாம்பசதாசிவக்குருக்கள் - நீர்வேலி

சர்வசாதகர்
சிவஸ்ரீ நா. மகாதேவக்குருக்கள் -

தேவஸ்தான பிரதமகுரு
சிவஸ்ரீ சாம்பசிவ சோமசபேசக்குருக்கள்

இங்ஙனம்:
- விழா உபயகாரர்கள்

விளம்பர அன்பளிப்பு செய்து
மேற்படி குருமார்களை நமஸ்கரித்துஆசிபெறும்
ஸ்தாபனங்கள்

**கலா அழகு களஞ்சியம்**
(பெஷன் ஹவுஸ்)
65 (203), காங்கேசன்துறைச் சாலை,
யாழ்ப்பாணம்.

**கணேசன் பட்டுச்சோலை**
201, காங்கேசன்துறைச்சாலை,
யாழ்ப்பாணம்.
(33351)

## 2-ம்ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 05 — 01 — 1917
மறைவு: 15 — 10 — 1992

### அமரர் பொ. செல்வரத்தினம்

(வடமாகாண கூட்டுறவு ஐக்கிய மேற்பார்வை சபை, முன்னாள் தலைவர், யாழ். மாவட்ட சிக்கன கூட்டுறவுச் சங்க சமாசம், தலைவர், மறுமலர்ச்சி மன்றம்)

கூட்டாய் உறவு கொண்டு
நூற்றாய் உயர்வு தந்து
காற்றாய் நீங்கள் கலந்திட்டபோதும்
ஓதும் பெயரை நும்
பணிகள் என்றென்றும்.

— மனைவி.

'மன்றம்'
லொட்டஸ் வீதி,
மாஸிப்பாய்.
(33352)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ தயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## பின்னடித்தால் முரண்பாடே

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பது தான் தனது கொள்கையும், நோக்கமும் என்று சந்திரிகா தலைமையிலான அரசு கூறுகிறது. இந்தக் கொள்கையை பொதுத் தேர்தலில் முன் வைத்து, அதனை நடைமுறைப்படுத்துவதற்கு தென்னிலங்கை மக்களிடம் ஆணையும் பெற்றிருக்கிறது.

தனது கொள்கையை நிறைவேற்றும் முயற்சியில் அரசு இறங்கியிருக்கிறது என்பது உண்மைதான். அந்த வகையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையும் தொடங்கப்பட்டுள்ளது. எனினும், அரசியல் தீர்வன்றி வேறில்லை என்ற தெளிவான உறுதியான, வெளிப்படையான நிலைப்பாட்டை இன்னமும் அரசிடம் காணமுடியவில்லை. அரசியல் தீர்வு சறுக்கினால் அரசு இராணுவத் தீர்வை மாற்றீடாகக் கொள்ளக்கூடுமோ என்ற நிலையே தெரிகிறது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில், ஒய்வுபெற்ற இராணுவ பிரிகேடியர் நாரத விக்ரமரத்னா தெரிவித்திருக்கும் கருத்துக்கள், அரசாங்கத்துக்குள்ளே இருக்கும் பலருக்கு நல்ல அறிவுரையாக அமைகிறது. அதாவது அரசியல் தீர்வைக் கொண்டு வர முயற்சி செய்வது; அது இயலவில்லையெனில் இராணுவத் தீர்வையே நாட வேண்டும் என்ற கருத்துடையவர்களும் சந்திரிகா அரசாங்கத்துக்குள் இருக்கிறார்கள். அவர்களின் அந்தக் கருத்தை மாற்றுவதற்கு பிரிகேடியர் நாரதவின் கருத்துக்கள் உதவ வேண்டும்.

உள்வாங்குவது — சேரணித்துக் கொள்வது — எவ்வளவு கஷ்டமாக இருந்தாலும், உண்மை நிலை ஒன்றை நாம் ஏற்க வேண்டும். யுத்தத்தில் எவரும் வெற்றி பெறுவதில்லை. எல்லோரும் தோல்வி காண்பவர்களே. இந்த உண்மை நிலையை ஏற்பதன் மூலமே எதிர்காலக் கொள்கையை உருவாக்கலாம்—

இராணுவத் தீர்வு காணும் கொள்கைக்குக் கடந்த பத்து ஆண்டுகளாகச் சந்தர்ப்பம் கொடுத்து வந்தோம். அதில் வெற்றி பெற்றோமா?— இல்லை! அறிவுள்ள எவரும் இராணுவத் தீர்வை நாட மாட்டார்கள் —

சமாதானம் ஏற்பட வேண்டும் என்ற கருத்துடன்பாடு ஒன்று இப்போது முதல் தடவையாக நாட்டில் ஏற்பட்டுள்ளது. இக்கருத்துடன்பாட்டுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கக் கூடாதா? — என்று அவர் கேட்பது அரசியல்வாதிகளினதும், யுத்த வெறிபிடித்த இராணுவ அதிகாரிகளினதும் மூளையைச் சலவை செய்யுமா?

போர் நடத்தி வெல்லக் கூடிய இராணுவ அமைப்போ, நடைமுறைச் சாத்தியமோ இல்லை என்பதனையும், இலங்கை இராணுவத்திடம் உள்ள குறைபாடுகளையும், ஓர் இராணுவ அதிகாரி என்ற வகையில் அவர் மிகத் தெளிவாக எடுத்து விளக்கியுள்ளார்.

அவரது கருத்துக்கள், இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு; அரசியல் தீர்வன்றி வேறெதுவுமில்லை என்ற நிலைக்கு சந்திரிகா அரசுக்குள் இருக்கும் ''தளம்பல்'' பேர்வழிகளை இட்டுச் செல்ல வேண்டும்.

அவ்வாறு அவர்கள் ஒரு தெளிவு நிலைக்கு வந்தால், பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் போர் நிறுத்தம் செய்வது பொருந்தாது என்ற பேச்சுக்கு இடமிருக்காது. போரில் வெல்லமுடியாது என்று தெரிந்தும் அதனை நிறுத்துவதற்குத் தயக்கம் ஏன்?

சமாதானப் பேச்சு என்ற வழிக்கு வந்தவர்கள் இராணுவத் தீர்வை அடியோடு மறந்துவிட வேண்டும். இல்லையேல் அவர்கள் யதார்த்தத்தைத் தெரிந்துகொண்டும் நிலத்தில் தலையைப் புதைக்கும் தீக்கோழிகளே!

எனவே அரசு இனிமேலும் யுத்த நிறுத்தம் குறித்து முடிவெடுக்க தாமதித்தாலோ அல்லது தயங்கினாலோ அல்லது பின்னடித்தாலோ அது அரசு கூறுவதற்கும் செயற்படுத்துவதற்கும் இடையில் முரண்பாட்டைக் காட்டும்.

# பூநகரி - சங்குப்பிட்டிப்பாதை குறித்து முதல் சுற்றுப்பேச்சில் முடிவு இல்லை

யாழ்ப்பாணம், ஒக். 15

பூநகரி - சங்குப்பிட்டி பாதையைத் திறப்பது பற்றி இரண்டு நாள் பேச்சுக்களின் போது விரிவாக ஆராயப்பட்டது. ஆனால் இறுதி முடிவு இதுதொடர்பாக எடுக்கப்படவில்லை.

அரசுக் குழுவின் தலைவர் திரு. பாலபட்டபென்டி முன் கண்டவாறு தெரிவித்தார்.

நேற்றுப் பிற்பகல் நடந்த செய்தியாளர் மாநாட்டில் கடந்த இரு நாள் பேச்சுக்களின் போதும் ஆராயப்பட்ட விஷயங்கள் பற்றிய விவரங்களை அவர் வெளியிட்டார்.

''பூநகரிப் பாதையைத் திறக்கவேண்டும் என்று விடுதலைப்புலிகள் தலைமைத்துவம் தெரிவித்தது.

இதனை எப்படி நிறைவேற்றமுடியும் என்று நாம் ஆராய்ந்தோம். இறுதிமுடிவு எதுவும் எடுக்கப்படவில்லை, — என்று அவர் சொன்னார்.

அவர் மேலும் சொன்னதாவது.

வடபகுதி மக்களின் பொருளாதாரக் கஷ்டங்கள் பற்றி பரிசிலனை செய்யப்பட்டது. பொருள்களின் விலைகளை குறைப்பது பற்றியும் ஆராயப்பட்டது. பொருள்களை கொண்டுவரும் போக்குவரத்துச் செலவைக் குறைப்பது பற்றியும் விவாதிக்கப்பட்டது

விரைவாக பொருள்களைக் கொண்டுவருவதற்குரிய பாதை பற்றியும் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கும் முட்டுக்கட்டைகளை விலக்கிக் கொள்வது பற்றியும் பரிசிலனை செய்யப்பட்டது.

அப்போது பூநகரி - சங்குப்பிட்டி பாதையை திறப்பது என்ற கோரிக்கையை விடுதலைப்புலிகள் தலைமைத்துவம் முன்வைத்தது'' — என்றும் சொன்னார் அவர்.

(இ-3-9)

## யுத்தநிறுத்தம், பாதை விவகாரம் புலிகள் தொடர்ந்து வலியுறுத்துவர்

யாழ்ப்பாணம், ஒக். 15

அரசாங்க தரப்பினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தற்போது நடைபெறும் பூர்வாங்கப் பேச்சுக்களில் யுத்த நிறுத்தம் குறித்தும், பாதை ஒன்றைத் திறப்பது குறித்தும் விடுதலைப் புலிகள் தொடர்ந்துவலியுறுத்துவர்.

கொழும்புச் செய்தியாளர்களுக்கு, தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. கே. கரிகாலன் அளித்த பேட்டி வருமாறு:-

கேள்வி:- இப்பேச்சுக்களின்போது யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது பற்றி பேசினீர்களா?

கரிகாலன்:- இல்லை.

கேள்வி:- சமாதானப் பேச்சுகளுடன் ஜனாதிபதித் தேர்தலை யாழ்ப்பாணத்தில் நடத்த அரசு முடிவு செய்தால் அதனை விடுதலைப் புலிகள் ஆதரிக்குமா?

கரிகாலன்:- பேச்சுவார்த்தைகளின்போது விஷயத்தை அரசுக்குழுவும் எடுக்கவில்லை. எமது தலைமைத்துவமும் அதுபற்றி தீர்மானம் எதுவும் எடுக்கவில்லை.

கேள்வி:- யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு இணங்காமல், சமாதான பேச்சுகளை தொடர்ந்து நடத்த அரசு முடிவு செய்தால் விடுதலைப் புலிகளின் முடிவு என்னவாக இருக்கும்?

கரிகாலன்:- எமது பிரதான கோரிக்கைகளாக பாதை ஒன்றை திறப்பதையும் யுத்த நிறுத்தக் கோரிக்கையையும் முன்வைத்துள்ளோம்.

கேள்வி:- இக்கோரிக்கைகளை நிறைவேற்றாமல் சமாதானப் பேச்சுகளைத் தொடர அரசு தீர்மானித்தால் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நிலைப்பாடு என்னவாக இருக்கும்?

கரிகாலன்:- இதற்கு ஒரு தீர்வு வரும் வரை பேச்சுகள் தொடராது என்று தேசியத் தலைவர் ஏற்கனவே சொல்லியுள்ளார்.

ராய்ட்டர் செய்தியாளர்:- சமாதானப்பேச்சுகள் குறித்து திரு. கரிகாலன் பொதுவாக திருப்தி அடைந்துள்ளாரா?

கரிகாலன்:- சமாதானப் பேச்சுவார்த்தைக்கும் யுத்த நிறுத்தத்துக்கும் தாம் தயாராக இருப்பதாக எமது தேசியத் தலைவர் தொடர்ந்து கூறிவருகின்றார்.

செய்தியாளர்:- தற்போது நடந்த பேச்சுகள் குறித்து சந்தோசப்படுகிறீர்களா?

கரிகாலன்:- பேச்சுவார்த்தை மூலம்தான் பிரச்சினையைத் தீர்க்க விரும்புவதாக எமது தேசியத் தலைவர் அறிக்கை விட்டிருக்கிறார். அரசாங்கத் தரப்பில் இருந்து வரும் பதிலைப் பொறுத்துத்தான் எங்களின் சந்தோசம் இருக்கும்.

(இ-3-9)

## யாழ். நூலக எரிப்பு குறித்து விசாரிக்க ஆணைக்குழு

### அரச பிரதிநிதிகளிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 15

யாழ். பொது நூலகம் 1981 ஆம் ஆண்டு எரிக்கப்பட்ட சம்பவம் குறித்து விசாரிக்க ஆணைக்குழு ஒன்றை அரசு நியமிக்க வேண்டும் என்று யாழ் மக்கள் விரும்புவதாக விடுதலைப் புலிகள் இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

பொது நூலக எரிப்புக்கு காரணம் என்ன, அதன் விளைவு மற்றும் நூலகத்தை மீண்டும் எப்படிக் கட்டலாம் ஆகிய அம்சங்கள் குறித்து ஆணைக்குழு விசாரணை நடத்தவேண்டும் என்றும் அக்கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகவல்களை செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்ட திரு. பாலபட்டபெண்டி, அரசுக்குழுவினர் எரிக்கப்பட்ட நூலகத்தைச்சென்று பார்வையிட்டனர் என்றும் தெரிவித்தார்.

குழுவின் ஓர் உறுப்பினரான கட்டடக்கலை நிபுணர் நவின் குணரத்னாவும் அப்போது இருந்தார் என்றும் அவர் தெரிவித்தார்.

(இ-3-9)

## வட்டு. இந்து பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 15

வட்டு. இந்துக்கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி அதிபர் திரு. நா. ஜெயநாயகம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமியும், சிறப்பு விருந்தினராக தமிழீழ கல்விக் கழகத்தைக் சேர்ந்த திரு. க. அருள் அவர்களும் கலந்து கொள்கின்றனர். (ஒ)

## சொத்தி உபாலி விளக்க மறியலில்

கொழும்பு, ஒக். 15

மாத்தளை மாநகரசபை உறுப்பினர் ரஸ்மார் ஹுசேன் கொலைச் சம்பவம் தொடர்பாக சொத்தி உபாலியும் மற்றும் ஒன்பது பேரையும் இம்மாதம் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி மாத்தளை பிரதம நீதிவான் காமினிவிஜேதுங்கா உத்தரவிட்டார்.

ரஸ்மார் ஹுசேன் கடந்த ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஓ-எ)

## அரசின் தீர்வு முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்குக!

### தளபதி படையினரிடம் வேண்டுகோள்

கொழும்பு, ஒக். 15

வடக்கு — கிழக்கில் அமைதியை ஏற்படுத்துவதற்கு கடுமையாக முயற்சி எடுத்துக் கொண்டிருக்கும் புதிய அரசாங்கத்துக்கு இராணுவம் ஒத்துழைப்பும், ஆதரவும் வழங்க வேண்டும்.

இராணுவத் தளபதி ஜெரி டி. சில்வா இவ்வாறு இராணுவத்தினருக்கு விசேட வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

இராணுவதினத்தை ஒட்டி வெளியிட்ட செய்தியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிரிகளையிட்டு இராணுவம் விழிப்பாக இருக்க வேண்டும் என்றும் விடுதலைப் புலிகள் சமாதானத் தீர்வுக்கு இணங்காத பட்சத்தில், போரினை முன்னெடுத்து முடிவுக்குக் கொண்டுவர தயாராக இருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

நவீன ஆயுதங்களும், கருவிகளும் எமக்குக் கிடைத்துள்ளன. போர் முனையில் இருக்கும் நாட்டுப்பற்று மிக்க இராணுவத்தினருக்கும் எனது விசேட நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன் — இவ்வாறு இராணுவத் தளபதி மேலும் கூறியுள்ளார்.

# இனப்பிரச்சினைக்கு எந்தவித தீர்வை விரும்புகின்றனர் என்பதை அறிவோம்

### அரச குழுத்தலைவர் தகவல்

யாழ்ப்பாணம், ஒக். 15

இனப்பிரச்சினைக்கு காணப்பட வேண்டிய தீர்வின் வடிவம் குறித்து, விடுதலைப்புலிகளும், வடபகுதி மக்களும் கொண்டிருக்கும் அபிப்பிராயங்களை நிச்சயப்படுத்துவதும் —

தமது வடபகுதி விஜயத்துக்கு பிரதமர் சந்திரிகா வழங்கிய ஆணை என்று —

யாழ்ப்பாணம் வந்துதிரும்பிய அரசாங்க பிரதிநிதிகள் குழுவின் தலைவர் திரு. பாலபட்டபெண்டி தெரிவித்தார்.

இரண்டு நாள் பூர்வாங்கப் பேச்சுக்களை முடித்துக் கொண்டு கொழும்பு திரும்பு முன்னர் உள்ளூர், உள்நாட்டு, வெளிநாட்டு பத்திகையாளர் மத்தியில் பேசுகையில் இவ்வாறு கூறினார்.

திரு. பாலபட்டபெண்டி மேலும் அங்கு கூறியதாவது:

பிரதமரின் தனிப்பட்ட கட்டளை மீது நான் இங்கு வந்துள்ளேன்.

உங்களுக்கும் வடக்கு மக்கள் அனைவருக்கும் தமது தனிப்பட்ட வாழ்த்துக்களைத் தெரிவிக்கும்படி பிரதமர் எம்மைக் கேட்டுள்ளார்.

வடபகுதி மக்கள் தற்போது நாளாந்தம் அனுபவித்து வரும் கஷ்டங்களை அத்தியாவசியப் பொருள்களை அதிகரிப்பதன் மூலமும் சேதமடைந்த பொது வசதிகளைத் திருத்துவதன் மூலமும் எப்படி நீக்குவது என்பது பற்றி உங்களுடன் பேசுவதற்கு பிரதமர் எமக்கு ஆணை தந்திருக்கிறார்.

யுத்த நிறுத்தம் ஒன்றை இறுதியில் கொண்டு வருவதற்கு ஏற்ற உகந்த சூழ்நிலை ஏற்படுத்தும் எண்ணத்துடன் ஆயுத மோதல்களைக் குறைப்பது குறித்து உங்களுடன் பேச்சுக்கள் நடத்துவதற்கும் எமக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

#### உள்ளத் தூய்மையான நடவடிக்கை

எமது தேசியப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்ற பிரதமரின் மிகச்சாதகமான உள்ளத்தூய்மையான ஒரு நடவடிக்கையாகவே எமது பிரசன்னத்தை இங்கு அனைவரும் பார்க்க வேண்டும்.

தற்போதைய பிரதமர் சந்திரிகாவின் தந்தையார் 1957 இல் செய்துகொண்ட பண்டாரநாயக்கா — செல்வநாயகம் ஒப்பந்தத்தின் பின்னர், தமிழரின் குறைபாடுகளை அமைதியான வழிகளில் தீர்த்து வைப்பதற்கு பகிரங்கமாக வாக்குக்கொடுத்துள்ள ஒரே தலைவர் பிரதமர் சந்திரிகா தான்.

வடக்கில் தற்போதுள்ள நிலைவரம் தேசியப் பிரச்சினையாக உள்ளது. இதற்குத் தீர்வு காண [illegible] எல்லோரும் ஈடுபடவேண்டிய தேவையுள்ளது [illegible] பல சமய சமூகத்தினரா

வோம்.

#### சமாதான நடைமுறை

சமாதான நடைமுறை ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்படவேண்டும் என்று பிரதமர் எண்ணினார். அது சமாதானத்தை வெற்றிகரமாக ஏற்படுத்த உதவும் என்பது அவரின் நம்பிக்கை. இதை பிரதமரும் அவரது அரசாங்கத்தினரும் நன்றாக உணர்ந்துள்ளனர்.

தமிழ் மக்களின் தற்போதைய நிலைவரத்தில் விடுதலைப்புலிகள் இயக்கம் செல்வாக்குமிக்க பங்கை வகிக்கின்றது. ஆகவேதான் நண்பர்களே, உங்களுடன் பேசுவதற்கு நாம் இங்கு வந்துள்ளோம்.

#### இரண்டு வகை நோக்கம்

இந்நோக்கம் இரண்டு வகைப்பட்டது. முதலாவது நிலையில், வடக்கில் உள்ள மக்களின் வாழ்க்கைக்கு தேவையான அத்தியாவசியப் பொருள்களை போதுமான அளவு சீராக விநியோகிப்பதற்கு அரசாங்கம் என்ன செய்யவேண்டும் என்பது பற்றி உங்களுடன் நாம் பேசவுள்ளோம்.

[illegible] லாஷைகள் பற்றி பரிசீலனை [illegible] எமது ஆலோசனையில் இருந்து தப்பவில்லை.

#### தலைவராக வருவார்

எமது தேசிய பிரச்சினைக்கான மொத்தத் தீர்வின் இறுதி வடிவம்;

பிரதமர் சந்திரிகா தலைமையிலான அரசாங்கத்தினால் தயாரிக்கப்படும். விரைவில் இந்த நாட்டின் தலைவராக வருவார் என்பதில் சந்தேகமே இல்லை.

எப்படியாயினும் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு அரசுக்குத் தெரியும்வரை இந்த விஷயத்தில் எதுவித முன்னேற்றமும் ஏற்படாது.

பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படவேண்டும் என்ற விஷயம் குறித்து எமக்கு வழங்கப்பட்டுள்ள ஆணை என்னவென்றால், —

தேசியப் பிரச்சினைக்கு காணவிரும்பும் தீர்வின் வடிவம் குறித்து விடுதலைப் புலிகளும் வடபகுதி மக்களும் கொண்டிருக்கும் அபிப்பிராயங்களை நிச்சயப்படுத்துவதாகும்.

முன்நிபந்தனையின்றி அமைதித் தீர்வைக் காணும் தமது உறுதிப்பாட்டுக்கு விடுதலைப் புலிகளும் தமிழ் சமூகமும் பரஸ்பரம் ஏற்றுக் கொண்டமை குறித்தும் பிரதமர் திருப்தியடைந்துள்ளார். இந்த உணர்வு மூலம் சமாதானத்தை ஏற்படுத்தி ஆயுத மோதலை நிறுத்த முடியும் என்று அவர் நம்புகின்றார். இவ்வாறு திரு. பாலபட்டபெண்டி தெரிவித்தார்.

(அ-எ-3-9)

## தாயாரை தகனம் செய்த இடத்தில் லயனல் அஞ்சலி

அரசு [illegible] யாழ் [illegible] வந்திருந்த திரு. லயனல் [illegible] றுக் காலை குருநகர் பகுதியில், முன்னர் தமது [illegible] சிதை மூட்டிய இடத்திற்குச் சென்று அஞ்சலி செய்தார். விடுதலைப் புலிகளின் பாதுகாப்புடன் அங்கு சென்ற அவருடன் செயலக அதிகாரிகளும் சென்றிருந்தனர்.

1977 ஆம் ஆண்டில் யாழ். மாவட்ட அரச அதிபராக திரு. லயனல் பெர்னாண்டோ பணியாற்றிய போது காலமான அவரது தாயாரின் உடல் தற்போது சென். றொக்ஸ் விளையாட்டு மைதானம் அமைந்துள்ள இடத்துக்கு சமீபமாக தகனம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஐ-51)

## யாழ்ப்பாண நிலைமைகள் குறித்து ரூபவாஹினி செய்தியாளர் தயாரிக்கும் விவரணப்படம்

யாழ்ப்பாணம், ஒக். 15

யாழ்ப்பாண நிலைமைகள் குறித்து விவரிக்கும் விவரணப் படம் ஒன்றை தயாரிப்பதில் ரூபவாஹினி செய்தியாளர்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

இங்கு வந்துள்ள ரூபவாஹினியின் செய்தியாளர்கள் பொதுமக்கள் பலரையும் பேட்டிகண்டு வருகின்றனர். இங்கு இராணுவ அட்டூழியங்களால் சேதமடைத்துள்ள பகுதிகளையும் அவர்கள் படம் பிடித்துள்ளனர்.

நகரில் உள்ள மண்ணெண்ணெய் கடைகள் உட்பட வர்த்தக நிலையங்கள் பலவற்றையும் அங்கே காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள பொருள்களையும் அவர்கள் கமராவுக்குள் அடக்கிக் கொண்டனர். (ஓ-3)

## புலிகளின் குரல் வானொலியில்

**15 — 10 — 1994**

**சனி இரவு**

- ★ 8-01 — அறிவியற் கலசம்
- ★ 8-10 — நிகழ்வும் பகிர்வும்
- ★ 8-25 — நேயர் கடிதங்கள்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40—சித்திரம் — அராலியூர் நல்லதம்பி எழுதிய ''ஈழவளம்''

**16— 10 — 1994**

**ஞாயிறுகாலை**

- ★ 7-02 — மாவீரவணக்கம்
- ★ 7-15 —களத்தில் மலர்ந்தவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 —களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழ் இன்பக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக். 15

யாழ். இந்துக்கல்லூரி அரங்கில் நான்கு நாட்கள் நடைபெறவுள்ள தமிழ் இன்பக் கண்காட்சியின் ஆரம்ப விழா இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெறும் ஆரம்பவிழாவுக்கு யாழ், ஆஸ்பத்திரி சத்திர சிகிச்சை நிபுணர் திரு. எம். கணேசரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

யாழ். உள்ளூராட்சித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள தமிழ் இன்பக் கண்காட்சி— இன்று முதல் எதிர்வரும் 18ஆம் திகதி வரை — காலை 9மணிக்கு ஆரம்பமாகி மாலை 4-30 மணி வரை நடைபெறும். (ஒ)

## இலவச அக்குபஞ்சர் சிகிச்சை

வட இலங்கை அக்குபஞ்சர் சங்கத்தால் நடத்தப்படும் இலவச வைத்திய சேவை தொடர்ந்து நடைபெறுகிறது. சகல விதமான - நாட்பட்ட நோய்களுக்கும்: ஞாயிறு தவிர்ந்த நாட்களில் காலை 8-30 மணி முதல் 12-30 மணி வரை சிகிச்சை பெறலாம்.

ந. புலிதாசன்
தலைவர்.

35, ஐந்துசந்தி
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(38881)

## தவறிவிட்டது

அளவெட்டி ஸ்ரீநாகேஸ்வரன் ஆலய திருப்பணிக்குரிய பணம் 14 ஆம் திகதி 2. 30 மணியளவில் கஸ்தூரியார் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் மேற்படி ஆலயத்தில் ஒப்படைத்து உதவி புரியுமாறு வேண்டுகின்றேன்.

அடையாளம்:

கறுப்புநிற பெண்கள் கைப்பையுள் ஆறாயிரத்து பத்து ரூபாவும், இந்திய இரண்டுரூபா இரு நோட்டும், சில்லறைக்காசும்.

(33355)

தொழில் நுட்பக் கல்லூரி
மாணவர் அவை நடத்தும்
மாபெரும்

## ★ கலை நிகழ்ச்சி ★

இடம் : தொழில் நுட்பக் கல்லூரி மைதானம்
காலம்: இன்று 15-10-94 சனிக்கிழமை
மாலை 6 00 மணி

சஞ்சிகை வெளியீட்டு நிதிக்காக மாணவர் அவையால் நடத்தப்படும் கலை நிகழ்ச்சிகள்

- ★ அன்றும் இன்றும் என்றும் மங்காப் புகழ்வாய்ந்த வீரதீர நிருப்புக்கள், சாண்டோ துரைரத்தினம் அவர்களும் அவரது மாணாக்கரும் வழங்கும் வீரதீரச் செயல்கள்.
- ★ குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களின் 'எந்தையும் தாயும்'' நாடகம்
  நெறியாள்கை: திரு. க. நிலாநாதன்
- ★ கலாசேஸ்திரா மாணவிகள் வழங்கும் ''செம்பு நடனம்''

மாணவர் அவை

பிறவுண் வீதி,
கொக்குவில்.

(33356)

# புலிகளின் போர் நிறுத்தக் கோரிக்கை

# அரசு கவனத்துக்கு சமர்ப்பிக்கப்படும்

யாழ்ப்பாணம், ஒக். 15

யுத்தநிறுத்தத்தை (Ceasefire) கொண்டுவரும் நோக்குடன் பகைமை நிறுத்தத்தை (Cessation of hostilities) ஏற்படுத்துவது பற்றி பேச்சு வார்த்தைகளின் போது விரிவாக ஆராயப் பட்டது.

அரசக் குழுவின் தலைவர் பாலபட்டபெண்டி இவ்வாறு தெரிவித்தார்.

திரு. கரிகாலன் Cessation of hostilities உம் Ceasefire உம் ஒரு அர்த்தத்தைத்தான் கொடுக்கிறது என்று கூறுகின்றார். எனக்கு இதில் கருத்து வேறுபாடு உண்டு. இரண்டிற்கும் இரண்டு அர்த்தங்கள் உண்டு. செயல்ரீதியில் இரண்டுக்கும் வெவ்வேறு அர்த்தங்கள் உண்டு'' — என்றுகூறிய திரு. பாலபட்டபெண்டி.

''Ceasefire'' என்பது இராணுவ நடவடிக்கைகளை முற்றாக வாபஸ் பெறுவது ஆகும். ஆனால் Cessation of hostilities என்பது இடைக்கால நடவடிக்கையாகும். இது கலந்துரையாடல், ஒழுங்கு முறைகள் மூலம் பூரண நிறுத்தத்தைக் கொண்டுவர உதவும்'' என்றார்.

கரிகாலன்: யுத்தநிறுத்தத்தை அறிவிக்க வேண்டும் என்று நாம் கேட்டோம்.

ராய்ட்டர் செய்தியாளர்: யுத்தநிறுத்தம் இல்லையென்றாலும் பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெறுமா?

பாலபட்டபெண்டி: இப்போது பேச்சுகள் நடைபெறுகின்றன தானே. யுத்தநிறுத்தம் பற்றி என்ன கருத்திருப்பினும் நாங்கள் பேச்சுகளை நடத்துகின்றோம். யுத்த நிறுத்தக் கோரிக்கை பற்றி அரசாங்கம் முடிவு செய்யும். விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்தக் கோரிக்கையை நாம் அரசுக்குச் சமர்ப்பிப்போம்.

## முன்னுரிமை அளிக்க வேண்டியவை

## புலிகள் பட்டியல் போட்டு அரச தரப்பிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 15

வட பகுதியில் நீர்ப்பாசனம் மின்சாரம், வீதிகள், பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள் ஆகிய துறைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய முன்னுரிமைப் பட்டியலை விடுதலைப் புலிகள் இயக்கம் தந்துள்ளது.

அரசுக்குழுத் தலைவர் பாலபட்டிபெண்டி முன்கண்டவாறு தெரிவித்தார்.

பேச்சுக்களின் போது வட பகுதிக்குத் தேவையான பொருளாதாரக் கட்டமைப்பு வசதிகள் பற்றி ஆராயப்பட்டது. இவை பற்றி விரிவாக ஆராய்ந்து முன்னுரிமைத் தேவைகளைக் குறித்துள்ளோம் என்றார் அவர். (இ-3-9)

## ஆசீர்வாதத்தின்வருகைக்கு காத்திருந்த வங்கியாளர்

யாழ்ப்பாணம், ஒக். 15

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வந்திருந்த அரச பிரதிநிதிகள் குழுவில் வந்த இலங்கை வங்கியின் தலைவர் திரு. என். ராஜன் ஆசீர்வாதம் இலங்கை வங்கியின் யாழ். மாவட்டக் காரியாலயத்துக்கு மேற்கொள்ளவிருந்த விஜயம் இறுதி நேரத்தில் கைவிடப்பட்டது.

நேற்று நண்பகல் 12.00 மணியளவில் இலங்கை வங்கியின் யாழ் மாவட்டக் காரியாலயத்துக்கு விஜயம் செய்ய விருப்பதாக நேற்றுக் காலையிலேயே மேற்படி காரியாலயத்திற்கு திரு. ராஜன் ஆசீர்வாதம் தெரியப்படுத்தி இருந்தார்.

எனினும் பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட நேர நெருக்கடியால் இறுதி நேரத்தில் அவர் இங்கு விஜயம் செய்ய முடியாமல் போய்விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இவரின் வருகையை எதிர்பார்த்து இலங்கை வங்கியின் யாழ். மாவட்டக் காரியாலய நிர்வாகத்தினரும், ஊழியரும் யாழ். ஆஸ்பத்திரி வீதி வாசலில் நேற்று நண்பகல் 12.00 மணியில் இருந்து 3.00 மணி வரை காத்திருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-4)



முதலாவது கட்டப் பேச்சுக்களின் முடிவில் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டின் போது எடுக்கப்பட்ட படங்கள். (இ-3-9)


தீபாவளியை முன்னிட்டு

காவேரியின்

**மலிவு விற்பனை வாரம்**

எமது வாடிக்கையாளர் உட்பட அனைவருக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

தீபாவளி - புத்தாண்டை முன்னிட்டு அனைத்து ஜவுளிகளும்

**16ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை**

மாபெரும் மலிவு விற்பனை

**காவேரி பட்டுச் சோலை**

48, சோதியா தெரு
யாழ்ப்பாணம்.

[33349]


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவனேஸ்வரி பாலசிங்கம்

கலைமகள் வீதி, கல்வியங்காட்டை பிறப்பிடமாகக்கொண்ட திருமதி சிவனேஸ்வரி பாலசிங்கம் 14-10-94 சிவபதம் அடைந்துவிட்டார்.

இவர் பாலசிங்கத்தின் (சிங்கண்ணை) அன்பு மனைவியும், சந்திரவதனா, சிறிதரன் (கனடா), றஞ்சிதமலர் (ஜேர்மனி), மோகரன் (ஜேர்மனி), கருணாகரன் (ஜேர்மனி), ஜெயவதனா, கிருபாகரன், றஜனி, கீதா ஆகியோரின் அன்புத் தாயாரும், ஞானேஸ்வரி, கமலேஸ்வரி, காலஞ்சென்ற யோகம், நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரவிச்சந்திரன், சுமதி, (கனடா), உதயகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும், சகிற் (ஜேர்மனி), யதுர்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(15-10-94) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 4.00 மணிக்கு செம்மணி இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்து செல்லப் படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பாலசிங்கம்
(கணவர்)

கலைமகள் வீதி
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

(33351)

### அந்தோனிப்பிள்ளை சந்தியாப்பிள்ளை (பண்டிதர்)

காலஞ்சென்ற பண்டிதர் சந்தியாப்பிள்ளை அவர்களின் பூதவுடல் எதிர்வரும் ஞாயிறு (16-10-94) அன்று பிற்பகல் 1.00 மணியளவில் கேரதீவு வீதி, நாவற்குழி கிழக்கிலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து அப்போஸ்தலர்சபை, 5/1 1ஆம் ஒழுங்கை, சமோட்டை வீதி கண்டிக்குளியிலுள்ள போதகர் இல்லத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதி ஆராதனையுடன் வசந்தபுரம் அப்போஸ்தல சபை கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கத்திற்காக மாலை 3.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள், சபையினர் யாவரும் அன்புடன் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்

(33357)

## போர் நிறுத்தம் நோக்கி....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பல அமர்வுகளில் நடந்த இப் பேச்சுவார்த்தைகள் 12 மணி நேரம் இடம் பெற்றன.

போர் நிறுத்தம், போக்குவரத்துக்கான பாதை திறத்தல், பொருளாதாரப் புனர்நிர்மாணம் போன்ற விடயங்கள் இப்பேச்சுக்களில் முக்கிய இடம்பெற்றன.

விடுதலைப் புலிகளின் குழுவுக்கு தலைமை வகித்த திரு. கரிகாலன் பேச்சுக்களை தொடக்கி வைத்து உரையாற்றும் போது நல்லெண்ணத்துடனும் திறந்த மனதுடனும் விடுதலைப் புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றுவதாகக் கூறினார்.

இரண்டாம் கட்ட ஈழப் போர் ஆரம்பமான காலம் தொட்டு எமது இயக்கத் தலைமை யுத்த நிறுத்தத்தையும், சமாதானப் பேச்சுவார்த்தைகளையும் வலியுறுத்தி வந்தது. எனினும் முந்திய அரசு இந்தக் கோரிக்கைகளை நிராகரித்து வந்தது எனவும் — கூறினார்.

### நோக்கத்தில் கருத்து ஒற்றுமை

திருமதி சந்திரிகா குமாரணதுங்காவின் புதிய அரசாங்கம் சமாதான வழியில் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண உறுதி கொண்டு நின்றது என்றும் இந்த வகையில் எமது இயக்கத்தின் நோக்குடன் கருத்தொற்றுமை நிலவுவதாகவும் — அவர் வலியுறுத்தினார்.

எமது மக்களின் மீது திணிக்கப்பட்ட யுத்தம் பாரிய சமூக பொருளாதாரப் பிரச்சினைகளை உருவாக்கியுள்ளது என எடுத்துக் கூறிய கரிகாலன் ஆரம்பகட்ட பேச்சுவார்த்தைகள் மேற்படி பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

சமாதானமும், இயல்பு நிலையும் ஏற்படுவதற்கு யுத்த நிறுத்தம் அவசியம் என எடுத்து விளக்கிய அவர் பேச்சுவார்த்தைகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு அது அவசியம் எனவும் திரு. கரிகாலன் எடுத்துக்கூறினார்.

அரசாங்கத் தரப்பு பிரதிநிதிகளின் குழுத்தலைவர் திரு. பாலபட்டபெண்டி தனது ஆரம்ப உரையில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்கு அரசாங்கம் ஆவலாக இருக்கின்றது என்றும்—

விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தி இப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான வழிவகைகளை ஆராயுமாறு பிரதம மந்திரி தமக்குப் பணித்துள்ளதாகவும்— கூறினார்.

தமிழர்களின் பிரச்சினை ஒரு தேசியப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது என்றும், இதைத் தீர்த்து வைப்பதில் அரசாங்கம் அக்கறை கொண்டுள்ளது எனவும் தெரிவித்த அவர்—

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வழி [illegible] ... ஆராய்வதும் [illegible] ... [illegible]

இருக்கின்றது — என்றும் கூறினார்.

### கப்பல் கட்டண விடயம்

இப்பேச்சு வார்த்தைகளின் போது வடபகுதிக்குள் அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டுவருவதில் உள்ள தடைகள், தாமதங்கள் சிக்கல்கள் பற்றி விரிவாக ஆராயப்பட்டது. கப்பலில் பொருள்களைக் கொண்டு வருவதற்கு கப்பல் கட்டணத்தைக் குறைப்பது அல்லது முற்றாக நீக்குவது பற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என அரச தரப்புப் பிரதிநிதிகள் வாக்குறுதியளித்தனர்.

தாண்டிக்குளம் பாதை ஊடாக லொறிகளில் பொருள்களைக் கொண்டு வருவதில் ஏற்படும் இடையூறுகள் குறித்தும் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் எடுத்து விளக்கினர், இந்தத் தடைகளை நீக்குவதற்கு அல்லது குறைப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அரசாங்கத் தரப்பில் வாக்குறுதி அளிக்கப்பட்டது.

அத்தியாவசியப் பொருள்களைப் ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் விநியோகித்து அதன் மூலம் அப் பொருள்களின் விலைகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அரச தரப்புப் பிரதிநிதிகள் கூறினர்.

### போக்குவரத்ப் பாதை

அடுத்ததாகப் போக்குவரத்துப் பாதையைத் திறந்துவிடுவது குறித்துப் பேசப்பட்டது. பூநகரியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரை விலகச் செய்து பூநகரிப் பாதையைத் திறந்து விட வேண்டும் என விடுதலைப் புலிகள் வலியுறுத்தினர்.

பூநகரிப் பாதையைத் திறப்பதால் தமிழ் மக்களின் போக்குவரத்துப் பிரச்சினை தீரும் என்றும், வடபகுதியில் இயல்புநிலை தோன்ற அது வழிவகுக்கும் என்றும் விடுதலைப் புலிகள் எடுத்துக் கூறினர்.

யாழ்ப்பாண முற்றுகையை இலக்காகக் கொண்டே இராணுவம் அங்கு தொடர்ந்து தரித்து நிற்பதாகவும், அரசுக்கு இராணுவத் தீர்வில் நம்பிக்கை இல்லாத பட்சத்தில் இராணுவத்தை விலக்கி சங்குப்பிட்டி பாதையைத் திறந்து தமிழரின் நல்லெண்ணத்தைப் பெற்றுக்கொள்ள அரசாங்கம் முயற்சிக்க வேண்டும் என்றும் புலிகள் கோரிக்கை விடுத்தனர்.

### இராணுவத்துடன் ஆராய்வர்

இந்தப் பிரச்சினை பற்றி இராணுவ உயர்பீடத்துடன் பேச்சுக்களை நடத்தப்போவதாக அரச தரப்புப் பிரதிநிதிகள் கூறினர்.

### பொருளாதார புனர் நிர்மாணம்

அடுத்ததாக பொருளாதாரப் புனர்நிர்மாணம் பற்றி விரிவாகப் பேசப்பட்டது.

வடபகுதியில் சிதைவுற்ற அத்தியாவசிய சேவை [illegible] ... [illegible] வேலைகளை மேற்கொள [illegible]

அளித்துள்ளனர்.

முக்கியமாக மின்சார விநியோகத்தை மீள அமைத்தல், வீதிகளைப் புனரமைத்தல், நீர்ப்பாசனத் திட்டங்களை சிரமைத்தல், பாடசாலைகள் வைத்தியசாலைகளைப் புனரமைத்தல், போக்குவரத்தை சீர்செய்தல் போன்றன சம்பந்தமாக உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரச தரப்பினர் ஒப்புக்கொண்டனர்.

மின்சார சேவைகளுக்கான ஜெனரேட்டர்களை எடுத்து வருவது பற்றியும் ஆராயப் பட்டது.

வடபகுதிக்குத் தேவையான அரச அலுவலர்களை நியமிப்பது தொடர்பாகவும் பரிசீலனை செய்யப்பட்டது.

### நூல்நிலையம்

நூல்நிலையம் எரிக்கப்பட்டதற்கான காரணத்தை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க விசாரணைக் குழு ஒன்றை நியமிப்பது பற்றியும் புதிய நூல்நிலையத்தை மீளவும் அமைப்பது பற்றியும் ஆராயப்பட்டது.

யுத்த நிறுத்தத்தைக் கொண்டுவருவதன் அவசியம் பற்றியும் விடுதலைப்புலிகள் எடுத்து விளக்கினர். யுத்த நிறுத்தத்தைக் கொண்டுவந்து ஒரு சமாதான சூழ்நிலையை உருவாக்குவதற்கு இராணுவம் முட்டுக்கட்டை போடுவதாகவும் சுட்டிக்காட்டினர்.

யுத்த நிறுத்தத்தால் இராணுவத் தரப்பிற்கு பாதிப்புகள் ஏற்படப் போவதில்லை என்றும் இராணுவம் சந்தேகமும், [illegible] உணர்வும் கொண்டு செயற்படுவதாகவும் புலிகள் குறிப்பிட்டனர்.

போர்நிறுத்தம் செய்வதன் மூலமே சகஜநிலை தோன்றும் என்பதை வலியுறுத்திய போது பேச்சுவார்த்தையை முன்னெடுக்க அது ஏதுவாக இருக்கும் என்றும் குறிப்பிட்டனர்.

### படிப்படியாக நகர முயற்சி

பகைமையைப் படிப்படியாக நீக்கிப் போர்நிறுத்தத்தை நோக்கிப் படிப்படியாக நகர்ந்து செல்ல அரசாங்கம் விரும்புவதாக அரச தரப்புப் பிரதிநிதிகள் கூறினர்.

போர் நிறுத்தம் மூலமாகவே பகைமையை நீக்கிச் சமாதானத்தைக்கொண்டுவர முடியும் என புலிகள் வற்புறுத்தினர்.

இறுதியில் இது சம்பந்தமாக ஜனாதிபதியுடனும், பாதுகாப்பு அமைச்சுடனும் தாம் கலந்தாலோசிப்பதாக அரச தரப்பினர் கூறினர்.

எங்களது அரசியல் பிரச்சினை தொடர்பாகவும் எதிர் காலத்தில் பேசுவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

இரண்டாம் கட்டப்பேச்சுக்கள் இன்னும் 10 நாட்களில் ஆரம்பமாகும்.

இருபகுதியினரும் சுமுகமாகவும், நல்லெண்ணத்துடனும் பேச்சுக்களை மேற்கொண்டனர். தீர்வு ஒன்று வரும் என்றும் நம்பிக்கை கொண்டுள்ளனர்— இவ்வாறு கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஜ-3-9)

## முதலாவது...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசுக்குழுதான் யாழ்ப்பாணம் செல்லும்.

சமாதானப் பேச்சுக்கள் குறித்த விடுதலைப் புலிகளின் பிரதிபலிப்பு மிகச்சிறந்ததாக இருந்தது.

இவ்வாறு அவர் கூறினார். [இ-எ-6]

## இரண்டாம்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இன்னும் பத்துத் தினங்களில் – இம்மாதம் 24 ஆம் திகதிக்கு முன்பு — அரசுக்குழு மீண்டும் பேச்சுக்கள் நடத்த யாழ். வரவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

''நாம் கொழும்பு திரும்பியதும் பிரதமரை சந்திப்போம். அவர் எமது வருகைக்காக காத்திருக்கிறார் யுத்தநிறுத்தம் பற்றி அவருக்கு தெரிவிப்போம்''— என்றும் திரு. ஆசீர்வாதம் தெரிவித்தார். (ஜ-எ-3-9)

## இன்று

சாவகச்சேரி பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா சேவா நிலையத்தினர் மனித மேம்பாட்டு கல்விக் கண்காட்சியும் கலை விழாவும் நாளையும் காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்தில் நடத்தவுள்ளனர். (ஓ-17)

★ ★ ★

யாழ்; ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத்தின் ஆண்டுக் கூட்டம் இன்று சனி காலை 9 மணிக்கு நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பாடசாலையில் நடைபெறும். (ஓ)

★ ★ ★

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தென்மராட்சிப் பிரிவினரால் பராமரிக்கப்படும் அல்லாரை ஆனந்த் பாலர் பாடசாலை, மந்துவில் நவசக்தி பாலர் பாடசாலை, மறவன்புலோ குட்டி பாலர் பாடசாலை கோவிலாக்கண்டி மகாவிஷ்ணு பாலர் பாடசாலை, மட்டுவில் தீவன பாலர் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் —

இன்று சனிக்கிழமை 2-00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் தென்மராட்சிப் பிரிவுப் பொறுப்பாளர் புலேந்திரன் தலைமையில் நடைபெறும். (ஓ-117)

## ஒஷன் ட்ரேடர்

கொழும்பு, ஒக் 15

வெற்றிலைக்கேணிக் கடலில் வைத்து விடுதலைப் புலிகளினால் மூழ்கடிக்கப்பட்ட 'ஒஷன் 'ட்ரேடர்' கப்பலுக்கு காப்புறுதி நட்டஈடு வழங்கப்படமாட்டாது என்று தெரிவிக்கப்படுகிறது.

யுத்தப்பிராந்தியத்தில் வைத்து இக்கப்பல் தாக்கப்பட்டதே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

எனினும்—அரசாங்கம் கப்பலின் உரிமையாளர்களுக்கு நட்டஈடு வழங்குமா என்பது தெளிவாகத் தெரியவில்லை என்று ஐலண்ட் நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது. (ஓ-எ)


**மாபெரும் இசைவிருந்து**

நாளை ஞாயிற்றுக்கிழமை

கைலாசபதி கலையரங்கில்

அபர்ணாலயாவின்

**புதுவசந்தம்**

காலை 9.00 மணி மாலை 4.00 மணி

நுழைவுச்சீட்டு மண்டப வாயிலில்

(ஒ/9336)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 15—10—1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org